**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-2　　Date : 02.01.2024
Case No. : O.S. 492-2019　　Nationality : Indian
Name : பிரபாகரன்(கிராம நிர்வாக அலுவலர்) மணலூர் கிராமம்　　Religion :
Age : 30
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது மணலூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சான்று என்னால் வழங்கப்பட்டதுதான் மேற்படி சான்று சாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ( மேற்படி சான்று தேதி குறிப்பிடவில்லை என்பதாலும் எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்பதாலும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 8.11.2022 தேதியிட்ட அடங்கல் பதிவு என்னால் வழங்கப்பட்டதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாசாஆ 1 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் தேதி குறிப்பிட்டுள்ளேன் முத்திரை மறைத்துள்ளதால் தேதி குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. கிராம நிர்வாக அலுவலர் பொது நாட்குறிப்பு பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான்.

என்னால் வழங்கப்படும் சான்றுகள் குறித்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் நான் அந்த நேரத்தில் 3 கிராமங்களை கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்ததால் கணக்குகளை சரியாக பதிவு செய்யவில்லை. நான் மேற்படி கிராமத்தில் கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்ததால் சான்றில் குறிப்பிடப்பட்ட நபர்தான் அந்த சொத்தினை அனுபவர் செய்து வந்தாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அவர்தான் அனுபவர் செய்து வந்தார். அவ்வாறு அவர் அனுபவம் செய்து வந்ததற்கு அருகில் வசிப்பவரிடம் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. சிட்டா அடங்கல் சம்மந்தமாக சான்று வழங்கும்போது அக்கம்பக்கம் உள்ளவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுதான் வழங்குவோம் என்றால் சரிதான். சாசாஆ 1 சான்றில் 7 புல எண்கள் எழுதப்பட்டு 2 புல எண்களை அடித்து சான்று வழங்கி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் வாதி கேட்டு கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.